# LAABH SAMACHAR

Volume: 10 Issue : 06 SEPTEMBER 2021 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE












SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

# Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available

37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014





# Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

இந்த மாதம், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் **திருமதி. நிர்மலா சீதாராமன்** அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகளுடன் சேர்ந்து நேரில் சந்தித்து பேசியது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்த அருமையான சந்தர்ப்பத்தை அங்கத்தினர்கள் அனைவரிடமும் இதழின் வாயிலாக பகிர்ந்துகொள்வதில் பெருமை கொள்கிறேன்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக, அரசின் ஊரடங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு இந்த முறையும் ஆண்டு விழா ரத்து செய்யப்படுகிறது. ஆண்டு பொதுக்குழு கூட்டம் ஜூம் காணொலி செயலி வழியாக நடைபெற செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அங்கத்தினர்கள் அனைவரும் அதில் தவறாது கலந்து கொள்ளவும்.

வருமான வரி இணையதளத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மற்றும் கொரோனா பரவல் சூழல் காரணமாக பல்வேறு வரி இனங்களுக்கான காலக்கெடுவை நீட்டித்துள்ளது. முக்கியமாக, 2020-21 நிதியாண்டுக்கான தனிநபர் வருமான வரித் தாக்கலுக்கான காலக்கெடுவை டிசம்பர்-31ம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

அதோடு, நிறுவனங்களுக்கான வருமான வரித் தாக்கலுக்கான காலக்கெடு நவம்பர் 30-ம் தேதியிலிருந்து அடுத்தாண்டு பிப்ரவரி 15-ம் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. இதனை வருமான வரி செலுத்தும் மக்கள் மற்றும் நிறுவனங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். நமது சேம்பர் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

நன்றி — குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்**
**இன்னாள் எனப்படுஞ் சொல்**

**பொருள்:** அவரவர்களுடைய அறிவு அவரவர்கள் மனத்தைச் சேர்ந்ததுதான் என்றாலும், அவருக்குப் பிறர் கொடுக்கும் மதிப்பு அவர் எந்த இனத்தாரோடு நெருங்கிப் பழகுகின்றாரோ அதை ஒட்டித்தான் உண்டாகும்.

**அதிகாரம் 46** | **சிற்றினம் சேராமை** (அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை) | **அரசியல்**

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

23.08.2021 – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், நிலையூர் N.K. குப்பய்யன்-ரத்னாமணி பள்ளி, NEXTGEN அமைப்பு மற்றும் மதுரை மாவட்ட சுகாதாரத்துறையுடன் இணைந்து கொரோனா தடுப்பூசி முகாம் நிலையூர் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டது.

03.09.2021 – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், மதுரை காந்தி NMR சுப்பராமன் மகளிர் கல்லூரி, NEXTGEN அமைப்பு மற்றும் மதுரை மாநகராட்சியுடன் இணைந்து கொரோனா தடுப்பூசி முகாம் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

07.09.2021 – நமது சேம்பர்-ன் சிறப்பு செயற்குழு கூட்டம் மாலை 5.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு முன்னாள் தலைவர்கள், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் பொதுக்குழு நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

07.09.2021 – தமிழ்நாடு வணிகநல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும் நிகழ்ச்சி நமது சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திருமதி. **P. தீபா** Deputy Commissioner (GST State), Madurai East, Madurai. அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. **K.S. லட்சுமி நாராயணன்** Asst. Commissioner (GST State), Tamilsangam Rd., Assessment Circle, Madurai அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. சரவணன் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். சிறப்பு அழைப்பாளர் திரு. L.B. அசோக் குமார் அவர்கள் ஏற்பாடு செய்தார். 50க்கும் மேற்பட்டவர்கள் உறுப்பனராக இணைய விண்ணப்பப்படிவம் அளித்தனர்.

11.09.2021 – மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் **திரு. மு. பூமிநாதன்** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் அவரது அலுவலகத்தில நேரில் சந்தித்து மதுரை மாநகர மேம்பாட்டிற்காக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

11.09.2021 – தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் **திரு. பி. மூர்த்தி** அவர்களை நேரில் சந்தித்து, சக்கிமங்கலத்தில் அமையவுள்ள சிட்கோ தொழிற்பேட்டைக்கு நன்றி தெரிவித்தும், ஸௌராஷ்ட்ர சமூக தொழில் முனைவோர்களுக்கு அங்கு வாய்ப்பு வழங்கும்படியும் கோரிக்கை அளிக்கப்பட்டது.

11.09.2021 – மதுரைக்கு வருகை தந்திருந்த மத்திய மீன்வளத்துறை அமைச்சர் **திரு. எல்.முருகன்** அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்..

12.09.2021 – மத்திய நிதி அமைச்சர் **திருமதி. நிர்மலா சீதாராமன்** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து தென்மாவட்டத்தில் தொழில் துறை வளர்ச்சிக்காகவும், மதுரையில் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டியும், நமது ஸௌராஷ்ட்ர சமூக கூட்டுறவு வங்கியை நிதி நெருக்கடியிலிருந்து மீளச் செய்ய உதவி கோரியும் மனு அளிக்கப்பட்டது.

– K.K. **தினேஷ்**

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மாத இதழ் சிறப்பாக பல தகவல்களுடன் அங்கத்தினர்களின் நலனுக்காக கொரோனா காலத்திலும் வெளி வந்துகொண்டிருக்கிறது என்றால், அதற்கு மிக முக்கிய காரணம் விளம்பரதாரர்களின் ஒத்துழைப்பினால் தான். ஆகவே, லாப் ஸமாச்சார் இதழில் உள்ள விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் அனைவரின் ஒத்துழைப்பு தொடர்ந்து இடம் பெற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் இதழில் புதுமையாக, சமூக சாதனையாளரை நேர்காணல் செய்து வெளியிட்டுள்ளோம். அங்கத்தினர்கள் அவசியம் படித்து கருத்துகளையும், ஆதரவையும் அளிக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி - B.S. **ஜெனார்த்தனன்**



https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk





நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள், கடந்த **12.09.2021** அன்று காலை மதுரைக்கு வருகை தந்திருந்த மத்திய நிதி அமைச்சர் திருமதி. **நிர்மலா சீதாராமன்** அவர்களை, சர்க்யூட் ஹவுஸில் சந்திந்து, மதுரை நகர தொழில் வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்துவது மற்றும் ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி நிதி நிலையை மேம்படுத்த உதவுவது குறித்த கோரிக்கைகள் அடங்கிய மனுவும். பென்சில் ஓவிய படம் நினைவுப் பரிசாக அளிக்கப்பட்டது. உடன் லாப் ஸமாச்சார் இதழும் அளிக்கப்பட்டது. மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

# மத்திய அமைச்சர்களை நேரில் சந்தித்த சேம்பர் நிர்வாகிகள்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள், கடந்த **11.09.2021** அன்று மாலை மதுரைக்கு வருகை தந்திருந்த மத்திய மீன் வளம் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் **திரு. எல். முருகன்** அவர்களை, சர்க்யூட் ஹவுஸில் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.




முகக்கவசம் இறுக்கமாக இல்லாமல் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

## தமிழக அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்களுடன் சந்திப்பு



தமிழக வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் கடந்த 11.09.2021 அன்று நேரில் சந்தித்து கோரிக்கை அளிக்கப்பட்டது. அதில் முக்கியமாக, மதுரை சக்கிமங்கலத்தில் அமையவுள்ள சிட்கோ தொழிற்பேட்டையால் நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மக்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும் இது குறித்து தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தும், தொழில்பேட்டையில் ஸௌராஷ்ட்ர சமுதாய தொழில்முனைவோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டியும் கோரிக்கை வைக்கப்பட்டது.

# மாநில அமைச்சர்களை நேரில் சந்தித்த சேம்பர் நிர்வாகிகள்

## தமிழக சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்களுடன்



தமிழக சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து மதுரை தெற்கு தொகுதி வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும் கோரிக்கையை வழங்கியதுடன், சட்டசபையில் பத்மஸ்ரீ டி.எம்.சௌந்திரராஜன் அவர்களுக்கு சிலை வைக்க கோரிக்கை வைத்ததற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அதோடு, மதுரை வளர்ச்சிக்கு, பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த மாமனிதர் ஸ்ரீமான். L.K. துளசிராம் அவர்களுக்கும் சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைக்கப்பட்டது. அன்னாரின் சேவைகள் குறித்த தகவல்களை அளிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

https://youtu.be/-JMVniVMLr0











# கைத்தறி நகரில் நடத்தப்பட்ட கொரோனா இலவச தடுப்பூசி முகாம்

23.08.2021 அன்று N.K. குப்பய்யன்-ரத்னாமணி பள்ளி, ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், NEXTGEN மற்றும் மதுரை மாவட்ட சுகாதாரத் துறை இணைந்து கொரோனா இலவச தடுப்பூசி முகாம் நடத்தியது. காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில், 219 பேர் முதல் தவணை தடுப்பூசியும், 459 பேர் இரண்டாம் தவணை தடுப்பூசியுமாக மொத்தம் 718 பேர் செலுத்திக்கொண்டு பயனடைந்தனர். அனைவருக்கும் கோவிஷீல்டு தடுப்பூசி மட்டுமே போடப்பட்டது. இம்முகாம் சிறப்பாக நடைபெற, தடுப்பூசி மருந்தினை வழங்கிய தமிழ்நாடு சுகாதாரத்துறைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். வலையங்குளம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் நிலையூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் முகாமினை சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். அதோடு, முன்களப்பணியாளர்களாக செயல்பட உதவிய கைத்தறிநகர் இளைஞர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் சேம்பர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.




# தெப்பக்குளத்தில் நடத்தப்பட்ட கொரோனா இலவச தடுப்பூசி முகாம்

03.092021 அன்று மதுரை காந்தி N.M.R. சுப்பராமன் மகளிர் கல்லூரி, ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், NEXTGEN மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து கொரோனா இலவச தடுப்பூசி முகாம் நடத்தியது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் முதல் தவணை தடுப்பூசியும், இரண்டாம் தவணை தடுப்பூசியுமாக மொத்தம் 491 பேர் செலுத்திக்கொண்டு பயனடைந்தனர். கோவிஷீல்டு மற்றும் கோவேக்சின் தடுப்பூசி போடப்பட்டது. இந்த முகாமில், கல்லூரி மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு தடுப்பூசி அளிக்கப்பட்டது. முகாம் சிறப்பாக நடைபெற, தடுப்பூசி மருந்தினை வழங்கிய தமிழ்நாடு சுகாதாரத்துறைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். முனிச்சாலை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களாக செயல்பட N.M.R. கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு சேம்பர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.






நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மூலமாக அங்கத்தினர்கள் பலர், தமிழ்நாடு வணிகநல வாரியத்தில் உறுப்பினராக இணைந்தனர். அவர்களின் விண்ணப்பப்படிவங்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட

திருமதி. **P. தீபா** Deputy Commissioner (GST State), Madurai East, Madurai. அவர்களிடம் வழங்கப்பட்டது.

திரு. **K.S. லட்சுமி நாராயணன்** Asst. Commissioner (GST State), Tamilsangam Rd., Assessment Circle, Madurai அவர்கள் உடன் இருந்தார்.

தமிழ்நாடு வணிகநல வாரியத்தில் 15.10.2021க்குள் இணைபவர்களுக்கு உறுப்பினர் கட்டணம் இல்லை என்ற மாநில அரசின் அறிவிப்பை தொடர்ந்து, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், விருப்பம் உள்ள அங்கத்தினர்கள் இணைந்து பயன்பெற வேண்டி கேட்டுக்கொண்டது. வணிக நல வாரியத்தில் இணைந்தால் கிடைக்கும் பயன்கள் குறித்த விபரங்களையும் வாட்ஸ்ஆப் வழியாக பகிரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சிறப்புக் கூட்டம் கடந்த 07.09.2021 அன்று மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில், கொரோனா தொற்று பாதுகாப்பு வழிமுறைகளுடன், அரசின் விதிகளுக்கு உட்பட்டு இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார். சிறப்பு அழைப்பாளர் திரு. L.B. அசோக் குமார் அவர்கள் உறுப்பினராக இணைவதற்கான வழிமுறைகளை தெரிவித்தார்.

இந்த வணிகநல வாரியம் என்பது, தொழிலாளர்களுக்கான நல வாரியம் போல, வணிகம் செய்பவர்கள் உறுப்பினராக இணைந்தால், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின், கல்வி, திருமணம் போன்றவைகளுக்கு உதவித்தொகையை பெறலாம். அதோடு, உறுப்பினராக இணையும் அந்த வணிகருக்கு விபத்துக் காப்பீடும் உண்டு. மேலும் பல்வேறு பயன்கள் மற்றும் இணைவதற்கான வழிமுறைகளை திரு. லட்சுமி நாராயணன் அவர்கள் தெரிவித்தார். வணிகநல வாரியம் பற்றிய தகவலை திருமதி. தீபா அவர்கள் தெரிவித்தார்.

இந்த அமைப்பின் தலைவராக தமிழக முதல்வர் அவர்கள் செயல்படுவார். பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் துணைத்தலைவராக செயல்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரங்கல் செய்தி



**சிவா சில்க்ஸ்** உரிமையாளரும், நமது சேம்பர் உறுப்பினருமான திரு. **B.D. ரவிக்குமார்** அவர்கள் 18.08.2021 அன்று மாலை காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டுகிறோம்.

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை–1. CELL: 92445 00633 | 99433 79499
EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be



# ESIC notifies relief scheme for COVID-hit

## In Case death, dependents will get money every month

The Employees' State Insurance Corporation has noticed a scheme for the dependents of ESI insured persons in case of death due to COVID-19 that would give a minimum of Rs. 1800 a month. The ESIC had published the details on June 18 inviting suggestions from the public. On Augst 11, the ESIC notified the scheme. The Scheme would cover the families of the insured who had been registered on the ESIC portal for at least three months before being diagnosed with COVID-19 and had been in employment on the date of diagnosis. In case of death due to COVID-19, the spouse, son up to 25 years of age, unmarried daughter and widowed mother of the insured would be eligible for the relief. The scheme, which would be effective for two years from March 24, 2020, would provide for 90% of the average daily wages of the insured to be paid to dependents.


ESIC notifies relief scheme for COVID-hit

In case of death, dependents will get money every month

Courtesy: The Hindu (E) - Dtd. 18.08.2021

மத்திய அரசு, கொரோனா நோயால் இறக்கும் தொழிலாலிகளின் குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. கொரோனா காரணமாக ஊழியர் ஒருவர் இறந்தால், இறந்தவரின் மனைவி, 25 வயதுக்குள் உள்ள மகன், திருமணமாகாத மகள் மற்றும் காப்பீடு செய்யப்பட்டவரின் தாய் (விதவையாக இருப்பின்) ஆகியோருக்கு காப்பீட்டாளரின் சராசரி தினசரி ஊதியத்திலிருந்து 90% மேற்படி குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த வாய்ப்பினை தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

For More details - Contact our SCC Member: **L.V.JOTHI PRAKASH**
Advocate & Labour Law Consultant, Madurai.
Mobile No : **98422 64144.**

# வரி கணக்குகள் தாக்கல் கால அவகாசம் நீட்டிப்பு

கடந்த ஆகஸ்ட் 29ம் தேதி அன்று, வருமான வரித்துறை பல்வேறு வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதியை நீட்டித்துள்ளது. வரி செலுத்துவோர், சில வரிக் கணக்கு படிவங்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதாக புகார் அளித்ததைத் தொடர்ந்து, சில வரி கணக்கு படிவங்களை தாக்கல் செய்வதற்கான தேதியை நீட்டிக்க வருமான வரித்துறை முடிவு செய்துள்ளது.

அதன்படி, நேரடி வரி தொடர்பாக நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு சுமுகத் தீர்வு காணும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள 'விவாத் ஸே விஸ்வாஸ்' திட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்துவதற்கான தேதி செப்டம்பர் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. வட்டித் தொகையும் சேர்த்து அக்டோபர் 31-க்குள் கட்டணம் செலுத்தலாம்.

ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்வதற்கான கெடு ஜுலை 31-ல் இருந்து நவம்பர் 30-ம் தேதி வரையிலும், தங்க முதலீட்டுப் பத்திரத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கான கெடு அக்டோபர் 31-ல் இருந்து டிசம்பர் 31-ம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதேபோல், படிவும் 15ஜி, 15ஹெச் ஆகியவற்றைத் தாக்கல் செய்வதற்கான தேதி முறையே நவம்பர் 30, டிசம்பர் 31 வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு ஜுலை முதல் 2021ம் ஆண்டு ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ஜி.எஸ்.டி வரிக் கணக்கு தாக்கல் செய்யாதவர்களுக்கு சலுகை அளிக்க ஜி.எஸ்.டி கவுன்சில் கடந்த மே மாதம் முடிவு செய்தது. அதன்படி, குறைக்கப்பட்ட தாமதக் கட்டணத்தை மத்திய நிதியமைச்சகம் கடந்த ஜுன் 1-ம் தேதி அறிவித்தது. இந்தக் கட்டணத்தை வரும் ஆகஸ்ட் 31-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, தாமதக் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நவம்பர் 30-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான புதிய வலைதளம், கடந்த ஜுன் 7-ம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



# தமிழ்த்தென்றல் **திரு.வி.க. விருது** பெற்ற, சுதந்திரப் போராட்டத்தில் ஸௌராஷ்ட்ரர்கள் நூலை எழுதிய திரு. V.N. சாமி அவர்களுடன் ஒரு சந்திப்பு




நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பலர் பல்வேறு துறைகளில் தடம் பதித்துள்ளனர். ஆனால், பத்திரிக்கைத் துறையில் கால் பதித்தவர்கள் வெகு சிலரே. அவர்களில் ஒருவர் தான் மூத்த பத்திரக்கையாளர் **திரு.V.N.சாமி.**

ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பிறந்தாலும், தமிழ் கலாசாரம், தமிழ் மொழி, ஈ.வே.ரா–வின் கொள்கைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். அவருடன் சில காலம் பணியாற்றியவர்.

இவர் **தஞ்சையில்** பிறந்தவர். **வாண்டுன்** இவரது வீட்டுப்பெயர். **வியாச** கோத்திரம். இவருக்கு மனைவி மற்றும் மகன் / மகள் உள்ளனர்.

நமது ஸௌராஷ்ட்ர சமுதாயத்தினர், வட இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து தென்னகத்தில், குறிப்பாக தமிழகத்தில் அதிக அளவில் வாழ்ந்து வருகிறோம். நமக்கு அடைக்கலம் அளித்து வாழ ஒத்துழைத்த இந்த தமிழ் சமூகத்திற்கு பிரதிபலனாக தமிழ் மொழிக்கு தொண்டாற்றியவர் தான் திரு. V.N. சாமி அவர்கள்.

அதன்பயனாக இன்று அவருக்கு தமிழ்த்தென்றல் **திரு.வி.க** விருதினை தமிழக அரசு வழங்கி கௌரவித்துள்ளது என்றால் அப்பெருமை நம் ஸௌராஷ்ட்ர சமுதயாத்திற்கும் சேரும். தமிழ் மொழி தொண்டுக்காக பெற்ற இந்த விருது, நமது ஸௌராஷ்ட்ர சமுதாயத்தில் யாரும் இதுவரை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே தான், இந்த மாபெரும் அர்ப்பணிப்பு செயலை, நமது சமுதாயத்திற்கு அடைக்கலம் அளித்த தமிழ் சமூகத்திற்கு கைமாறாக கருத வேண்டும்.

தமிழ் மொழிச் சொற்களை மிக நேர்த்தியாக கையாளும் திறன் மிக்கவர்கள் பலர் நம் ஸௌராஷ்ட்ர சமுதாயத்தில் உள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், மறைந்த பத்மஶ்ரீ. டி.எம். சௌந்தரராஜன், பட்டிமன்ற பேச்சாளர் திரு. தா.கு. சுப்பிரமணியன் ஆகியோர் ஆவர். அந்த வரிசையில், திரு. V.N. சாமி அவர்களும் தமிழ் மொழியில் புலமை பெற்றதன் பயனாக, பிரபல பத்திரிக்கையில் ஆசிரியராக இருந்து பல்வேறு பிரபலங்கள், முன்னோடி அரசியல் தலைவர்களான பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., கருணாநிதி போன்றவர்களை பேட்டி கண்டுள்ளார்.

பத்திரிக்கைத் துறையில் இணைந்த பொழுது வழிகாட்டியாய் இருந்தவர், அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தரும், பின்னாளில் ராஜ்ய


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002 Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
18 ஆம் ஆண்டு சேவை
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

சபா உறுப்பினரான திரு. **எம். ரத்தினசாமி** தான் என்று தெரிவித்தார். அந்த காலக்கட்டத்தில் அவர் மிகப்பிரபலமான, திறமைமிக்க மனிதர் என்று தெரிவித்தார். திரு. V.N. சாமி அவர்கள் இத்துறையில் வருவதற்கு முன்னர் இன்சூரன்ஸ் துறையில் இருந்துள்ளார்.







திரு. V.N. சாமி அவர்கள் 1989ல் பத்திரிக்கைத் துறையில் பணி ஓய்வு பெற்ற பிறகு, 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றும், ஆராய்ச்சிகள் செய்து, ஆழமான கருத்துகளை, உண்மையான தகவல்களை சேகரித்து எழுதப்பட்டவை. அதில் ஒன்று தான் **சுதந்திரப் போராட்டத்தில் ஸௌராஷ்ட்ரர்கள்** என்கிற நூல். கடந்த ஆண்டு இதன் முதல் பதிப்பு வெளியானதை தொடர்ந்து சென்ற மாதம் இதன் இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார். இதற்கு முன் **தமிழ்நாட்டில் ஸௌராஷ்ட்ரர்கள்** என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு ஆராய்ச்சி நூல்களை எழுதிய இவர் நம் சமூகத்தைக் குறித்த விபரங்களை ஆராய்ச்சி செய்து எழுத வேண்டும் என்று 2016-ல் கருதியதன் பயனாக எழுதியது தான் சுதந்திரப் போராட்டத்தில் ஸௌராஷ்ட்ரர்கள்.




இது தவிர, நமது சமூகத்தில் உள்ள வீட்டுப்பெயர் மற்றும் கோத்திரம் எந்தெந்த ஊரில் உள்ளவர்களைக்குறிக்கும் என்பது பற்றியும், தோன்றிய விபரங்களை ஆராய்ச்சி செய்தும் எழுத வேண்டும் என்ற திட்டமும் உள்ளதாக தெரிவித்தார். உதாரணத்திற்கு, தமது வீட்டுப்பெயரான வாண்டுன், தஞ்சாவூர் மட்டுமல்லாது, வாலாஜாபேட்டை, ஐயம்பேட்டை பகுதியிலும் உள்ளதாகத் தெரிவித்தார். ஆகவே, வீட்டின் பெயரைக் கொண்டு இவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று அறிய ஒரு நூலை ஆராய்ச்சி செய்து எழுத வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

அதோடு, நமது ஸௌராஷ்ட்ர மொழியை எட்டாவது அட்டவணையில் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். இந்த எட்டாவது அட்டவணையில் நமது மொழியை சேர்த்தால், இந்திய அரசாங்கத்திடம் மொழி வளர்ச்சிக்கான அங்கீகாரத்தை பெறலாம். அதோடு, ஆட்சி மொழியாக வருவதற்கான வாய்ப்பையும் பெறலாம் என்று தெரிவித்தார். நமது ஸௌராஷ்ட்ர மொழி, குறைந்தது மொழி வளர்ச்சிக்கான அங்கீகாரத்தையாவது பெற வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் அரசியல், கல்வி, கலாசாரம், உணவு, தொழில், தொழில்நுட்பம், நகர வளர்ச்சி போன்ற வற்றில் ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களின் பங்கு என்பது மூலாதார பங்காக / ஒரு திருப்புமுனை ஏற்படுத்தும் விதமாக இருப்பதை மேற்படி துறைகளில் நுட்பமாக, ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் தெரியும்.

அந்த வரிசையில், எம்.ஜி.ஆர் அவர்களின் மீது மக்கள் கொண்டுள்ள அபிமானத்திற்கு அவரின் திரைப்பட வசனங்கள், பாடல் வரிகள் மட்டுமல்லாது அதைப் பாமர மக்களிடத்தில் நயத்துடன் கொண்டு சேர்க்கும் விதமாக பாடிய மறைந்த புகழ்பெற்ற பாடகர் திரு. டி.எம். சௌந்திரராஜன் அவர்களின் காந்தக் குரலும் ஒரு மிக முக்கிய காரணம். அந்த ஈர்ப்பே, அவரை பின்னாளில் அரசியல் தலைவராகவும் ஆக்கியது.

திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பிணக்கு ஏற்பட்டு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தாம் தனியாக அரசியல் பிரவேசம் செய்வதற்கு, முதன் முதலில் ஊக்கமளித்தவர் திரு. V.N. சாமி தான் என்பது பலரும் அறிய வாய்ப்பல்லை. இதனை உறுதிப்படுத்தும் விதமாக ஆதாரங்களை அளித்தார்.


புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் எழுதப்பட்ட நூல் **நான் ஏன் பிறந்தேன்**. இந்நூலில், தி.மு.க.வில் தமக்கு ஏற்பட்ட பிணக்கின் காரணமாக அதிலிருந்து வெளியேறி, இனி அரசியலில் தாம் என்ன செய்வது என்ற வருத்தத்தில் சத்யா ஸ்டூடியோவிலேயே தங்கிவிட்டார். 4 நாட்கள் வெளியே வரவில்லை. இது குறித்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்று எண்ணத்தில் பத்திரிக்கை ஆசிரியர்களான திரு. நாத்திகம் பாலு மற்றும் திரு. V.N. சாமி அவர்களை அழைத்துப் பேசினார்.

அப்போது திரு. V.N. சாமி அவர்கள், மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டத்தை வைத்துக்கொண்டுள்ள நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும் என்று கூற, புரட்சித் தலைவர்



எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி, உடனே ஆர்.எம். வீரப்பன் அவர்களை அழைத்து ரசிகர் மன்றக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்து தமது அரசியல் பயணத்தை சீரும சிறப்புமாக ஆற்றியதாக பெருமையுடன் தெரிவித்தார். 'துவண்டு இருந்தவரை தன் யோசனையால் தட்டி எழுப்பியவர் திரு. V.N.. சாமி.'

இந்த தகவல், ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதிவியில் இப்பொழுது ஈராக்கில் பணியாற்றி வரும் **திரு. ஆர். கண்ணன்** அவர்கள் எழுதிய **"M.G.R. *A Life*"** நூலில் இடம் பெற்றுள்ளது. இதை புகழ்பெற்ற பென்குயின் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. திரு. ஆர். கண்ணன் அவர்கள் இந்த தகவலை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தாம் கைப்பட எழுதிய **நான் ஏன் பிறந்தேன்** என்ற நூலில் குறிப்பிட்டிருந்ததை மறுபதிப்பாக எழுதியுள்ளார் என்று V.N. சாமி அவர்கள் தெரிவித்தார்.




நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் ஸௌராஷ்ட்ர சமுதாயத்திற்கு மட்டுமல்லாது, பிற சமூக மக்களின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாக இருக்கும் திரு. V.N. சாமி அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வணங்குகிறது. அவர் சமீபத்தில் எழுதிய **சுதந்திரப் போராட்டத்தில் ஸௌராஷ்ட்ரர்கள்** – நூலை நம் சமூக மக்கள் அனைவரும் வாங்கி படிக்க வேண்டும். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்திலும் இந்த நூல் கிடைக்கும். தொடர்புக்கு: **93441 97952** என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.









*From the book of* **MGR** - *A Life*


> The 10 October payasam episode in the aftermath of the suspension might have been bravado, for the 14 October expulsion had hit MGR hard, and he confined himself to his Sathya Studios. From there, a 'dazed' MGR sought advice. 'Nathigam' Balu and **V.N. Swami** were two reporters who had been requested, via telephone, to come over. When they met him, on 15 October, they found that MGR feared that his political career had been ruined. Nonetheless, he seized on Swami's idea to invite his fans' representatives across the state to confer, and instructed RMV to convene such a meeting. The refrain of the 2000 or so representatives who descended on Sathya Studios was that MGR found his own outfit. Buoyed, MGR indicated that he would heed their advice.
>
> - Page: 180-181





## பென்குயின் பதிப்பில், திரு. ஆர். கண்ணன் அவர்கள் எழுதிய நூல் MGR - *A Life*



## அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு – புதிய தளம்

e-Shram இ-ஷிரம்

Shramev Jayate

NATIONAL DATABASE OF UNORGANISED WORKERS

நாட்டை கட்டமைப்பவர்களாக இருக்கும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை பாதுகாப்பதற்காக மத்திய அரசு கடந்த 26.08.2021 அன்று இ-ஷிரம் தளத்தை முறைப்படி துவக்கி வைத்துள்ளது.

இந்த வகை தொழிலாளர்களுக்கு ஏதேனும் உயிருக்கோ, உடலுக்கோ பாதிப்பு ஏற்பட்டால் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நிலை கேள்விக்குறியாகி விடுகிறது. இது போன்ற சமயத்தில் சமூக பாதுகாப்பை பெற நமது மத்திய அரசு இ-ஷிரம் என்கிற தளத்தை 26.08.2021 அன்று துவக்கியுள்ளது.

இந்த இ-ஷிரம் தளத்தில் பதிவு செய்யும் ஒவ்வொரு அமைப்புசாரா தொழிலாளருக்கும் ரூ. 2 லட்சம் விபத்து காப்பீடு அளிக்கப்படுகிறது. விபத்து மூலம் உயிரிழந்தாலோ அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ ரூ. 2 லட்சம் வழங்கப்படும் என்றும், ஓரளவு ஊனத்திற்கு ரூ. 1 லட்சம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 வயது முதல் 59 வயதுக்குட்பட்ட எந்தவொரு தொழிலாளியும் இ-ஷிரம் **https://www.eshram.gov.in/** போர்ட்டலில் பதிவு செய்ய தகுதியானவர்கள் ஆவர். இதில் பதிவு செய்வதற்கு ஆதார் முக்கியமான ஆவணமாகும்.

விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், பால்காரர்கள், அங்கன்வாடி தொழிலாளர்கள், தெரு விற்பனையாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், MGNREGA - மகாத்மாக காந்தி ஊரக வளர்ச்சி தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், **gig** தொழிலாளர்கள் (பணி நிரந்தரமற்ற / கான்ட்ராக்ட் அடிப்படையிலான தொழிலாளர்கள், உணவு டெலிவரி செய்யும் தொழிலாளர்கள் போன்றோர்), பிளாட் ஃபார்ம் தொழிலாளர்கள் போன்றவர்கள் இந்த இ-ஷிரம் **https://www.eshram.gov.in/** தளத்தில் முறையாக பதிவு செய்து பயன்பெறலாம். **– இதழ் குழு**



## பிரதம மந்திரி ஷிரம் யோகிமான்-தான்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான - ஓய்வூதியத் திட்டம்

## Pradhan Mantri Shram Yogi Maan-dhan

A pension scheme for unorganised workers

**– இதழ் குழு**

PM-SYM தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு மத்திய துறை திட்டமாகும். இது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் CSC eGovernance Services India Limited (CSC SPV) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் பெரும்பாலும் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள், மதிய உணவு தொழிலாளர்கள், தலைமை ஏற்றிகள், செங்கல் சூளை, சலவை தொழிலாளர்கள், ரிக்ஷா ஓட்டிகள், சொந்த கணக்கு தொழிலாளர்கள், விவசாய தொழிலாளிகள், கட்டுமானம், கைத்தறித் தொழிலாளர்கள் மேலும் இது போன்ற பிற தொழில்கள் மூலம் மாத வருமானம் ரூ. 15000/- அல்லது அதற்கு குறைவாக ஈட்டும் 18 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள் இந்த புதிய ஓய்வூதியத் திட்டம் PM-SYM-ல் இணையலாம்.

இவர்கள், ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஊழியர் மாநில காப்பீடு நிறுவனம் (ESIC) ஆகியவற்றின் கீழ் இருக்கக்கூடாது. மேலும் வருமான வரி செலுத்துபவராகவும் இருக்கக்கூடாது.

இந்த திட்டத்தில், பங்களிப்பான 50:50 அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டமாகும். உதாரணமாக, ஒரு நபர் 29 வயதில் இந்தத் திட்டத்தில் நுழைந்தால், அவர் 60 வயது வரை மாதம் ரூ. 100/- வழங்க வேண்டும். அதற்கு சமமான தொகை ரூ. 100/- மத்திய அரசால் வழங்கப்படும். இப்படி ஒவ்வொரு சந்தாதாரரும், 60 வயதை அடைந்த பிறகு குறைந்தபட்சம் மாதம் ரூ. 3000/- ஓய்வூதியம் பெறுவார்கள்.

ஓய்வூதியத்தைப் பெறும்போது, சந்தாதாரர் இறந்தால், பயனாளியின் துணைக்கு குடும்ப ஓய்வூதியமாக பயனாளி பெற்ற ஓய்வூதியத்தில் 50% பெற உரிமை உண்டு. குடும்ப ஓய்வூதியம் வாழ்க்கைத் துணைக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த திட்டத்தில் இணைய, சந்தாதாரர் ஒரு மொபைல் போன், சேமிப்பு வங்கி கணக்கு / ஜன்தன் கணக்கு மற்றும் ஆதார் எண்ணை வைத்திருக்க வேண்டும். தகுதியுள்ள சந்தாதாரர் அருகிலுள்ள பொதுச் சேவை மையங்களுக்கு CSC eGovernance Services India Limited (CSC SPV) சென்று சுய சான்றிதழ் அடிப்படையில் பதிவு செய்யலாம்.

மற்றவர்களிடமிருந்து ஆறு அடி இடைவெளிவிட்டே இருங்கள்.

# ரியல் எஸ்டேட் துறையினர், கமிஷன் முகவர்கள், கடை, சுயதொழில் செய்வோர் ஓய்வூதியம் பெறும் வசதி

இந்த திட்டம் சில்லறை வர்த்தகர்கள் / கடைக்காரர்கள் மற்றும் சுய தொழில் செய்யும் நபர்களின் முதியோர் பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்புக்காக துவக்கப்பட்டது.

இதில், கடை உரிமையாளர்கள், சில்லறை வியாபாரிகள், அரசி / எண்ணை போன்ற ஆலை உரிமையாளர்கள், பணிமனை உரிமையாளர்கள், கமிஷன் முகவர்கள், ரியல் எஸ்டேட் தரகர்கள், சிறிய ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் பிற லகு வியாபாரிகள் போன்றோர் இந்த திட்டத்தில் இணையலாம்.

இதில் இணைவோரின் வயது வரம்பு, 18 முதல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ. 1.5 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும். ESIC / EPFO / NPS ஆகியவற்றில் உறுப்பினராக இருக்கக்கூடாது. PM-SYM பயனாளியாகவும் இருக்கக் கூடாது.

இந்த திட்டத்தில், பங்களிப்பான 50:50 அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டமாகும். உதாரணமாக, ஒரு நபர் 29 வயதில் இந்தத் திட்டத்தில் நுழைந்தால், அவர் 60 வயது வரை மாதம் ரூ. 100/- வழங்க வேண்டும். அதற்கு சமமான தொகை ரூ. 100/- மத்திய அரசால் வழங்கப்படும். இப்படி ஒவ்வொரு சந்தாதாரரும், 60 வயதை அடைந்த பிறகு குறைந்தபட்சம் மாதம் ரூ. 3000/- ஓய்வூதியம் பெறுவார்கள்.

ஓய்வூதியத்தைப் பெறும்போது, சந்தாதாரர் இறந்தால், பயனாளியின் துணைக்கு குடும்ப ஓய்வூதியமாக பயனாளி பெற்ற ஓய்வூதியத்தில் 50% பெற உரிமை உண்டு. குடும்ப ஓய்வூதியம் வாழ்க்கைத் துணைக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த திட்டத்தில் இணைய, சில்லறை வர்த்தகர்கள் / கடைக்காரர்கள்/ சுயதொழில் செய்பவர்கள், ஒரு மொபைல் போன், சேமிப்பு வங்கி கணக்கு / ஜன்தன் கணக்கு மற்றும் ஆதார் எண்ணை ஆகியவற்றைக்கொண்ட அருகிலுள்ள பொதுச் சேவை மையங்களுக்கு CSC eGovernance Services India Limited (CSC SPV) சென்று சுய சான்றிதழ் அடிப்படையில் பதிவு செய்யலாம்.

PM-SYM தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு மத்திய துறை திட்டமாகும். இது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் CSC eGovernance Services India Limited (CSC SPV) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் அனைத்து தொழிலாளர் அலுவலகங்கள், எல்.ஐ.சி-யின் அனைத்து கிளை அலுவலகங்கள், இ.எஸ்.ஐ.சி / இ.பி.எஃப்.ஓ. அலுவலகங்கள் ஆகியவை சில்லறை வணிகர்கள் / கடைக்காரர்கள் / சுயதொழில் செய்பவர்களுக்கு இத்திட்டம் பற்றிய முழு தகவல்களையும், அதன் நன்மைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அவற்றின் வசதி போன்றவைகளை வழங்குவதற்கான மையங்களாக செயல்படும்.

– இதழ் குழு







Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®

நல்லெண்ணெய்




Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL

2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

http://www.laabhmart.org/rajalakshmioilmill

## Objectives:

As part of the Aatmanirbhar Bharat 3.0 package, the Central Govt. launched the Aatmanirbhar Bharat Rozgar Yojana (ABRY) to incentivize creation of new employment opportunities during theCOVID-19 recovery phase by providing assistance to the employers of establishments registered with EPFO torecruit unemployed persons including re-employment of those who were rendered un-employed during the Pandemic. Considering the disruption caused by the consequent second wave of Covid-19 pandemic, the Central Government has extended the validity period of registration up to 31.03.2022.

## Nature and scale of Incentive:

- Incentive for Employers of EPFO registered establishments & their New Employees with monthly wage less than Rs.15000/-
- Incentive is inform of payment of both employees & employer's contributions i.e. 24% of wages in r/o new employees in Estts employing upto 1000 employees & employee's EPF contributions i.e. 12% of wages in r/o new employees in estts employing more than 1000 employees.
- The incentive is payable by the Central Government by upfront credit in the UANs of the new employees.

Validity Period:

- For registration of eligible employers and new employees
  - From1st October, 2020
  - Upto 30th June, 2021. The central government has extended the validity period of registration by 9 months up to 31.03.2022.
- For payment of incentive inform of EPF contributions 24 Wage months from date of registration of new employees

## Beneficiaries:

- "New employee" means any employee drawing wages less than Rs15000 per month–
